அங்கே அரசுப் புறம்போக்கு நிலம் 41 சென்ட் இருக்கிறது. அதைத் தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டதற்கும் அவரும் மேலே பெர்மிஷன் கேட்டு எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆக, அந்த இடங்களை வாங்கியாவது அரசு துரித நடவடிக்கை எடுத்து கட்டிடம் கட்டிக் கொடுத்து பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தை உருவாக்கி பெண்கள் அங்கே நன்கு படிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலமாகவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலமாகவும் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் எழுத்து மூலமாக அரசுக்குத் தந்தால் அதிகாரிகளுக்குத் தக்க ஆணையிட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மறைமலை நகரிலுள்ள உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டியதன் அவசியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. சாமிக்கண்ணு அவர்கள் பெயரில் இருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அவருக்குப் பதிலாக திரு. டி. எம். வெங்கடாசலம் அவர்கள் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில் உள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு வைப்பு நிதியாக அரசுக்கு ரூ. 32,000/-ம் 1986ஆம் ஆண்டே பொதுமக்களால் செலுத்தப்பட்டிருந்தும் இதுவரை அதற்காக எவ்வித ஆணையும் பிறப்பிக்காமலிருப்பதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரசு நிதிநிலை இடந்தருவதற்கு உட்பட்டும் பல்வேறு இடங்களின் தேவைகளை ஒப்பு நோக்கியும் ஆண்டுதோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்த அரசு அனுமதித்து வருகிறது.

2. செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரிலுள்ள அரசு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்காக அந்த வட்டார பொது மக்கள் (பொதுவாக உயர்நிலைப் பள்ளிகள் தொடங்குவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளின் அடிப்படையில்) கட்டிட பங்குத்தொகை ரூ. 2,500-ம் பொது மக்கள் பங்குத் தொகை ரூ.10,000-ம் ஏற்கெனவே செலுத்தியுள்ளனர். மற்றும் போதுமான காலி இடம் போன்ற வசதிகளும் இருப்பதாகத் தெரிய வருகிறது.

3. 1986-87ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளிகள் தொடங்குவதற்காக மாநிலம் முழுவதிலும் இருந்து வந்திருந்த கருத்துருக்களை ஆய்வு செய்து அவ்வாண்டு தொடங்க வேண்டிய உயர்நிலைப்பள்ளிகள் பட்டியலை முடிவு செய்யும்பொழுது மேற்சொன்ன பள்ளியைச் சேர்க்க இயலாமல் போய்விட்டது.

4. எனினும் இனிவரும் ஆண்டுகளில் தொடங்க இருக்கும் உயர்நிலைப்பள்ளிகளின் பட்டியலை அரசு முடிவு செய்யும்பொழுது (ஏனைய இடங்களில் தேவைகளுடன்) மறைமலைநகரின் தேவையும் கருத்தில் கொள்ளப்படும்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இதிலே கேள்வி கேட்க முடியாது.

(ஈ) திண்டுக்கல் தொகுதி தாடிக்கொம்பு சௌந்திரராஜப் பெருமாள் கோயில் திருப்பணிகள்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்திலேயே மிகத் தொன்மையான அழகிய, மிகச் சிறந்த சிற்பங்களை உடைய திண்டுக்கல் தொகுதி தாடிக்கொம்பு அருள்மிகு சௌந்திரராஜப் பெருமாள் கோயிலினுடைய சுற்றுச் சுவர்களும் மற்றும் சில சுவர்களும் மிகவும் பழுதடைந்து விழுந்துவிடும் நிலையிலுள்ளது பற்றியும், அந்தச் சிற்பங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை குறித்தும்'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்